செ.வெ.எண்-12 நாள்-08.02.2017

# பத்திரிக்கைச் செய்தி

கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் இரண்டாவது வாரத்தில் கோழிக்கழிச்சல் நோய் தடுப்பு இருவார முகாம் நடத்தப்பட்டு வருகின்றது. இவ்வாண்டும் 09.02.2017 முதல் 22.02.2017 வரை இருவாரங்கள் கோழிகளுக்கான ‘‘கோழிக்கழிச்சல் நோய் தடுப்பூசிப்பணி முகாம்’’ அரியலூர் மாவட்டத்தில் அனைத்து கிராமங்களிலும் நடைபெற உள்ளது.

இம்முகாமில் 8 வாரம் மற்றும் அதற்கு மேற்பட்ட அனைத்து கோழிகளுக்கும் இந்த தடுப்பூசி மேற்கொள்ளப்பட உள்ளது. எனவே அனைத்து கோழிவளர்ப்போர் மற்றும் விவசாயிகள் இம்முகாமில் கலந்து கொண்டு தங்கள் கோழிகளுக்கு தடுப்பூசி போட்டு பயன்பெறுமாறு என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப, அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.